பதிவு எண்: M 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.
மலர்: 15] சென்னை: மாசி 2 (14—2—68) புதன் ★ வெளியூர்: மாசி 3 (15—2—68) வியாழன் [இதழ்: 202

மதுரைச் சம்பவம்

மாவட்டச் செயலாளர் விரைந்தார்

சென்னை, பிப். 14— சட்டமன்ற மேலவைக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் பொருட்டுச் சென்னைக்கு வந்திருந்த மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் மதுரைச் சம்பவங்கள் பற்றிச் செய்தியறிந்ததும், மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுவரும் முதலமைச்சர் அண்ணா அவர்களைச் சந்தித்துவிட்டு மதுரைக்கு விரைந்தார்.

மாணவர்களுக்கு எதிர்ப்பா-- மாநில அரசுக்கு எதிர்ப்பா?

காங்கிரசார் கொள்கைதான் என்ன?

காழ்ப்பை---தோல்வி மனப்பான்மையை கழகத்தின்மீது பாய்ச்சுவதா?

'யாகாவாராயினும் நாகாக்க' என்பது குறள்! இந்தக் குறளின் மேன்மையையும் பொருளையும் புரிந்து நடந்து கொள்ளாததாலேயே இன்றைய உலகத்துப் பிரச்சினைகளில் சரிபாதி தீராமல் தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கின்றன. அதிலும், தமிழகத்தில் உள்ள காங்கிரசுக் கட்சியின் இன்றைய அவல நிலைக்கு இந்தக் குறளைத் திரு. சுப்பிரமணியம் மறந்துவிட்டதே முழுக் காரணமாக அமைந்துவிட்டிருக்கிறது

காங்கிரசைக் காப்பாற்றுவதற்கு முனைந்து எழுந்து ஆவேசக் கூச்சலிட்டுப் புறப்படும் அவசரத்தில் திரு. சுப்பிரமணியம், தமது நாவைக் காப்பதற்குத் தவறிவிட்டார்; அதன் விளைவு, மாணவர்களிடையில் கொந்தளிப்பை மூட்டி—அடங்கிய கலவரத்தை மீண்டும் தலைதூக்கச் செய்வதில் முடிந்திருக்கிறது!

மாணவர்கள் இந்தியை எதிர்த்து நின்றதையும், அவர்களுடைய நியாயமான அச்சத்தையும் யாரும் குறைகூற முடியாது. அதேபோல், அவர்கள் தங்களுடைய அச்சத்தை வெளிப்படுத்துவதற்காகத் தொடங்கிய கிளர்ச்சிகளில் வன்முறைகள் தலைதூக்கிச் சேதம் விளைவித்ததையும் யாரும் பாராட்ட முடியாது.

இந்த வன்முறைச் செயல்களை வளரவொட்டாமல் தடுப்பதிலும், அதே நேரத்தில் மாணவர்களின் உள்ளக்கொதிப்பை உணர்ந்து ஆவன செய்வதற்கும் தமிழக அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள், சனநாயக உலகம் பாராட்டக்கூடியவையாகும்.

சனநாயகத்தில் அனைவரும் மதிக்கப்படுவதில் உள்ள மேன்மை தமிழகத்தில் மாணவர்கள் கிளர்ச்சி அடங்கி, அனைவரும் ஒழுங்குறப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் சென்றதைக் கவனித்தவர்கள் உணரக்கூடியவையே!

ஆனால், காங்கிரசார் இதனை உணரும் சக்தியை—அல்லது நேர்மையை இழந்துவிட்டனர் என்பதைத் திரு. சுப்பிரமணியம் அவர்கள், பள்ளிகள்—கல்லூரிகள் திறக்கப்பட்ட அன்றே மெய்ப்பித்துவிட்டார்!

அவர் என்ன பேசினார் என்பதோ, அதற்கு அவர் உடனடியாக மறுப்பும் வருத்தமும் தெரிவித்ததைப் பத்திரிகைகளில் சரியாக விளம்பரப்படுத்தப்படவில்லை என்று சுப்பிரமணியம் கூறுவதோ, இப்போதைக்கு வேறு விவகாரம்.

ஆனால், சுப்பிரமணியம் அவர்களின் நாத்துடுக்கைத் தொடர்ந்து அதற்கு எதிர்ப்புக் காட்டும் வகையில் நடந்துகொண்ட மாணவர்களைச் சமாதானப்படுத்தும் வகையில் காங்கிரசார் நடந்துகொள்ள மறுப்பதுதான் இன்றைக்கும் பூதாகாரமாக வடிவெடுத்துள்ள பிரச்சினையாகும்.

'கறுப்புக் கொடி ஏற்றும் கழகத்துக்காரர்களைப் பொதுமக்கள் கவனித்துக் கொள்வார்கள்' என்று அன்றிருந்த பக்தவத்சலம் நாத்துடுக்காகத் தெரிவித்த வழியில், இன்று கறுப்புக் கொடி காட்டும் மாணவர்களைக் காங்கிரசுத் தோழர்கள் திருப்பித் தாக்கிக்கொண்டிருப்பது பிரச்சினைக்குப் பரிகாரம் ஆகாது என்பதுடன், சிறுபிள்ளைகளிடம் வயதான மனிதர்கள் நடந்துகொள்ளவேண்டிய வரம்புக்கும் அப்பாற்பட்டதாகும்.

தங்களுடைய எதிர்ப்பை ஆவேசமாகக் காட்டி முழக்குவது மாணவர்கள் இயல்பாக இருக்கலாம்; ஆனால், வன்முறையில் இறங்கவேண்டும் என்பது அவர்களின் இயல்பல்ல என்பதை உணர்ந்தவர்கள், 'கடுகை மலையாக்குவோர் காங்கிரசுக் காலிகளே' என்பதைப் புரிந்துகொள்ளாமல் இருக்கமுடியாது!

"1965-ல் மாணவர்கள் நடத்திய இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளில் வன்முறைகள் வரைமுறையற்றுப் புகுந்துகொள்ள இடங்கொடுத்தவர்கள், மதுரைக் காங்கிரசுக்காரர்கள்தாம்" என்பதை நாடு நன்கறியும்! மாணவர்கள் மறக்கவில்லை! மதுரை நகரத் தெருக்களில் காங்கிரசு வெறியர்கள் மாணவர்களைத் துரத்தி ஓடி, வெட்டு-குத்து நடத்தவில்லை என்றால், 1965-ல் அழிவு அவ்வளவு பயங்கரமானதாக இருந்திருக்காது!

இன்று அதே மதுரைக் காங்கிரசு வெறியர்கள் மாணவர்களைத் தாக்கும் கொடுஞ்செயலில் இறங்கியிருப்பது, பெரிதும் வருந்தத்தக்கதும் கண்டிக்கத்தக்கதுமாகும்.

மாணவர்கள் 13-ந் தேதி காலை மதுரையில், சுப்பிரமணியம் அவர்களைக் கண்டித்து ஓர் ஊர்வலம் நடத்தினார்கள். அந்த ஊர்வலம் மதுரைக் காங்கிரசுத் தொழிற்சங்கக் கட்டிடத்திற்கு முன்னால் வந்ததும் ஒரு சில வன்முறைச் சம்பவங்கள் நடந்ததாக அறிவிக்கப்படுகிறது; உடன் காவல்துறை அந்த இடத்திற்கு விரைந்து நிலைமையைக் கட்டுக்குள் அடக்கி மாணவர்களைக் கலைத்தது.

அதற்குப் பிறகு நடைபெற்ற வன்முறைக்கு யார் பொறுப்பு என்பதும், அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டியதும் அதற்கென முறையாக உள்ளவர்களைப் பொறுத்ததாகும்; ஏனென்றால், இது கட்சிப் பிரதிகட்சிப் போராட்டமல்ல; ஒரு கட்சியைச் சார்ந்தவர்களின்நாத்துடுக்குக்கும், அதன் காரணமாக எரிச்சலூட்டப்பட்டுள்ள மாணவர் சமுதாயத்திற்கும் ஏற்பட்ட விவகாரம் ஆகும். இதில், கட்சிரீதியில் கணக்கெடுப்பது பிரச்சினையை மேலும் சிக்கலானதாகவே ஆக்கும்.

ஆனால், காங்கிரசுக்காரர்கள் நடந்துகொண்ட முறை என்ன? மாணவர்களைப் பழிவாங்கும் நோக்கத்தோடு வளர்ந்த மனிதர்கள் புறப்பட்டிருக்கிறார்கள்! சிறுவர்களை எதிர்த்து— அறுபது ஆண்டுக்கும் மேலாக அரசியல் நடத்திப் பழக்கப்பட்ட ஓர் அமைப்பு—ஆர்ப்பாட்டம் செய்யக் கிளம்பியிருக்கிறது!

மாணவர்கள் கிளர்ச்சியை அரசியல் கட்சிகளின் கிளர்ச்சியாக உருக் கொடுக்க காங்கிரசுக்காரர்கள் முயற்சி செய்திருக்கிறார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், காங்கிரசுத் தரப்புத் தொழிலாளர்கள், மாணவர்களுக்கு எதிராகக் கிளம்பியிருக்கிறார்கள்; தங்கள் சங்கத்தின் கட்டிடம் மாணவர்களால் தாக்கப்பட்டதற்குப் பதிலடி கொடுக்க அவர்கள் புறப்பட்டார்களாம்! 'ஐ.என்.டி.யு.சி. ஆபீசைத் தாக்கியதைக் கண்டிக்கும் வகையில் ஆலைத் தொழிலாளர்கள், ஊர்வலம்' நடத்தினார்களாம்!

இந்த 'ஆலைத் தொழிலாளர் ஊர்வலம்' சென்ற வழியெங்கும் கழகத் தோழர்களையும், கழகக் கிளைகளின் பணிமனைகளையும் குறிவைத்துத் தாக்குதல் நடத்தியிருக்கிறது!

மாணவர்களிடம் நாத் துடுக்கையும், கழகத் தோழர்களிடம் கைத் துடுக்கையும் காண்பிக்கக் கிளம்பியிருக்கும் காங்கிரசார், தங்களை மதுரையிலும், நெல்லையிலும் தெளிவாக அடையாளங் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்!

காங்கிரசுத் தோழர்கள், கழகத்தவர்களுக்கு எதிரிகளல்லர்; அவர்களை எதிரிகளாகக் கருதும் மனப்போக்கும் கழகத் தோழர்களிடம் கிடையாது! அழிந்துகொண்டிருக்கும் அமைப்பின் உறுப்பினர்கள் பரிதாபத்திற்கு உரியவர்களே தவிர, எதிரிகளாகக் கருதப்படக்கூடிய யோக்கியதை பெற்றவர்களல்லர்!

ஆனால், காங்கிரசுத் தோழர்கள், தங்களை எதிரிகளாகக் காட்டிக் கொண்டிருப்பதில்தான் இன்னும் கொஞ்சநாளைக்குத் 'தாப்பு' நிலைக்கும் என்று கருதுகிறார்கள் போலும்!

இந்தத் தகாத நினைப்பின் அடிப்படையில்தான் இன்று மதுரை, நெல்லை மாவட்டங்களில் விஷ விதையைக் காங்கிரசார் தூவிக் கொண்டிருக்கின்றனர்!

திரு. சுப்பிரமணியம், தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டிக்குத் தலைமையேற்றபோது, 'அரசியல் நாகரிகமுடையதாக அது மாறும்' என்று நினைத்தவர்கள் ஏமாந்துவிட்டனர்!

இரஷ்யப் புரட்சிபற்றி அமெரிக்க ஆசிரியர்கள் எழுதிய புத்தகத்திற்கு இங்கிலாந்துப் பத்திரிகைகள் எழுதிய விமர்சனத்தைப் படித்துவிட்டு, அதன்படி இங்கும் அரசியல் நடக்கவேண்டும் என்று விரும்பும் 'கற்றுக் குட்டி'கள் குடிபுகுந்துள்ள காங்கிரசுக் கட்சி, கேரளத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு காங்கிரசார் கையாண்ட தந்திர அரசியலை வெள்ளோட்டம் விட்டுப் பார்க்கின்றனர்போலும்!

நகருக்கு நகர் கூலிப் பட்டாளங்களை ஏவிவிடுவதன் மூலமாகவே, இழந்துவிட்ட அரசியல் அதிகாரம் கிடைக்குமா என்பதை மட்டுமல்ல — மறந்துபோன பொதுமக்கள் மறுபடியும் காங்கிரசாரை நினைவு கூருவார்களா என்பதையும் காங்கிரசார் கவனிக்க வேண்டிய நேரம் இதுதான்!

'வன்முறைச் சம்பவங்கள் மூலமாகவே தி. மு. கழகத்திற்கு நெருக்கடி உண்டாக்க முடியும்' என்று காங்கிரசுத் தோழர்கள் நம்பிக்கை வைத்திருப்பார்களானால், அதில் அவர்கள், வழக்கம்போலவே தோற்றுப் போவார்கள் என்பதையும் உறுதியாகக் கூறுகிறோம்-

ஏனென்றால், தி. மு. கழகத் தோழர்கள் அடிவாங்கிப் பழக்கப்பட்டவர்கள்—தியாகம் செய்ததன் மூலமாகவே கழகத்தை

(4-ம் பக்கம் பார்க்க)

சட்டமன்றத்தில்..!

[போகாத நிருபர்]

"துப்பாக்கிச் சூட்டினால் தொழிலாளி மட்டுமல்ல—எந்தக் குடிமகனுமே இறக்கக் கூடாது என்பதுதான் இந்த அரசாங்கத்தின் திட்டவட்டமான கொள்கையாகும்"

என்ற சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்களின் தெளிவான அறிவிப்பும், அதையொட்டிய தொழில் துறை தகராறு பற்றிய விவாத நிகழ்ச்சிகளும், நேற்றைய சட்டமன்ற நடவடிக்கைகளின் உச்சக் கட்டமாக அமைந்திருக்கின்றன.

"இப்போது இடது கம்யூனிஸ்டுகள், கழகத்துக்கு எதிராக இயங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பது தவறு; இரண்டு கட்சிகளுக்கிடையே எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும், இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சி, காங்கிரசை எதிர்க்கும் கொள்கைகளில் கழகத்தின் பக்கமே நிற்கும்"

என்று அக்கட்சி உறுப்பினர் திரு. ஜி. பாரதி மோகன், தமது உரையின் ஓரிடத்தில் குறிப்பிட்டிருப்பதும்—

இத்தொடர்பில் குறுக்கிட்டு விளக்கமளித்த சட்ட அமைச்சர் மாதவன் மற்றொரு இடத்தில்,

"சட்டத்துக்குப் புறம்பாக நடப்பதற்கு எவருக்கும் உரிமை கிடையாது; சட்டத்தை மீறுவது எந்தக் கட்சியாயினும் தக்க நடவடிக்கை எடுப்பதற்குக் கழக அரசு எந்த நிலையிலும் தயங்காது"

என அறிவித்திருப்பதும், சில புதிய சூழ்நிலைகளையொட்டி எழுந்துள்ள ஐயப்பாடுகளுக்குத் தகுந்த விளக்கம் அளிப்பவையாக அமைகின்றன.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

'திறமைசாலிகள் ஆட்சியில் கல்லெறியே நடக்கவில்லையா?'

'முன்பு ஆண்டவர்களைவிடப் பண்போடு நடக்கவே விரும்புகிறோம்'

'தேனி' நிகழ்ச்சியை எடுத்துக்காட்டி அண்ணு விளக்கம்

சென்னை, பிப். 12—

"கோவையில் நடந்த சம்பவங்களுக்காக—போலீசுச் சக்திக்கும் மீறி கல்லெறி நடந்திருந்தபோதிலும்—அரசின் சார்பிலும், என் சார்பிலும் மனம் நிறைந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இவ்வளவு வருத்தம் தெரிவிப்பதற்குக் காரணம், நாங்கள் அரசாளாமல் இருந்த காலத்தில், தேனியில் நாவலர் நெடுஞ்செழியன்மீது கல் வீசப்பட்டபோது, ஆட்சியில் இருந்தவர்கள் ஒரு துளியும் வருத்தம் தெரிவித்துக்கொள்ளவில்லை என்பதை நினைவில்கொண்டு, அவர்களைவிட நாங்கள் பண்போடு நடந்துகொள்ள வேண்டும் என்பதேயாகும்"

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள், இன்று சட்டமன்றத்தில், குறுக்கிட்டுப் பேசுகையில் கூறினர்.

கழக உறுப்பினர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி பேசும்போது, எதிர்க் கட்சித் தலைவர் பி. ஜி. கருத்திருமனுக்கும் – ஏ. வி. பி. ஆசைத்தம்பிக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தினிடையே அண்ணு அவர்கள் குறுக்கிட்டுப் பேசினர்கள்.

திரு. ஆசைத்தம்பி பேசுகையில் கோவையில் நடந்த கல் வீச்சுப் பற்றிக் குறிப்பிட்டு, 'இதற்குமுன் கல்லெறி நிகழ்ச்சியே நடக்கவில்லையா? இப்பொழுதுதான் நடந்திருக்கிறதா?' என்று கேட்டபோது, திரு. கருத்திருமன், 'இதற்குமுன் நடந்திருக்கிறது என்பதால், இப்பொழுது நடக்கலாம் என்று உறுப்பினர் கூறுகிருரா?' என்று வினவினர்.

இந்த நேரத்தில் அண்ணு அவர்கள் குறுக்கிட்டுப் பேசியதாவது :–

"கல்லெறி சம்பவங்கள் இதற்கு முன் நடந்திருக்கின்றன என்பதால் இப்பொழுது நடப்பது நியாயம் என்று உறுப்பினர் வாதிடுவதாகக் கருதக்கூடாது. இந்தக் கல்லெறி, அரசின் திறமைக் குறைவை எடுத்துக்காட்டும் என்ருல், இதற்குமுன் திறமையாக அரசாண்ட காலத்திலும் இம்மாதிடரி நடந்திருக்கிறது."

ஏ. வி. பி. ஆசைத்தம்பி :—"ஓர் அமைச்சரின் தலையில் கல் வீசப்பட்டதற்கு வேதனைப்படுகிறேன்.

ஆனுல், போலீசாரின் சக்திக்கு மீறிய இடத்திற்கு அமைச்சர் போயிருக்கக் கூடாது. மொரார்ஜி தேசாய் மாதிரி அங்கே போகாமல் இருந்திருக்க வேண்டும்.

கருத்திருமன் :—" வரவேண்டாம் என்று நீங்கள் சொன்னதால் அவர் வரவில்லை."

ஏ. வி. பி. ஆசைத்தம்பி :—"அவர் வந்திருந்தால், பெங்களூரில் நடந்தது மாதிரி இங்கும் நடந்திருந்தால் என்ன ஆவது?"

கருத்திருமன் :—" அதனுல்தான், 'இங்கே வரவேண்டாம; வந்தால் கல்லெறிவோம்' என்று முன்னுலேயே சொல்லிவிட்டீர்களா?"

அண்ணு :—" மொரார்ஜியை, 'இங்கு வரவேண்டாம்; வந்தால் கலவரங்கள் நடக்கும் என்று சொன்னதன்பேரில் வரவில்லை' என்று இங்கே பேசிக்கொண்டிருந்தார்கள்; ஆனுல், அவருக்கு எவ்வளவு பக்குவமாக எடுத்துச் சொல்லப்பட்டது என்று எதிர்க் கட்சித் தலைவருக்குத் தெரியாது.

அந்த நேரத்தில் அவர் வந்திருந்தால், சட்டத்தையும் சமாதானத்தையும் காப்பாற்றவேண்டும் என்ற நிலைமை அரசுக்கு ஏற்பட்டிருக்கும். பெங்களூரில் நடந்ததைப்போல கலவரங்கள் ஒரு பக்கத்திலும்—கலவரங்களை அடக்குவது ஒரு பக்கத்திலும் நடக்கும்.

அப்பொழுது அந்த மாதிரி அடக்குமுறையைப் பயன்படுத்திஞல், 'அது நியாயம்தான்' என்று சொல்லக்கூடிய மன நிலையில் நம் எதிர்க் கட்சி இருக்கிறதா என்ருல் இல்லை; அண்மையில் நடந்த காங்கிரசு மாநாட்டில் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர், 'இவர்கள் ஆட்சிக்கு வந்து மூன்று—நான்கு முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டார்கள்' என்று சொல்லியிருக்கிருர்; எனவே, எங்களுக்கு எதிராகப் பயன்படுத்துவார்கள் என்பதால் மட்டும் தவிர்க்க விரும்பவில்லை; கலவரம் — உயிர்ச் சேதம் — பொருட் சேதம் இவைகளையெல்லாம், 'சில நிகழ்ச்சிகள் நிறுத்தப்படுவதன்மூலம் தடுக்கவேண்டும்' என்ற முறையில்தான் மொரார்ஜிக்கு எடுத்துச் சொல்லப்பட்டது."

ஏ. வி. பி. ஆசைத்தம்பி :—"கல் வீசுவது பற்றி கருத்திருமன் குறிப்பிட்டார்; எங்களுக்குக் கல் வீசவும் தெரியாது—தண்டவாளத்தைப் பிடுங்கவும் தெரியாது—தந்திக் கம்பியை அறுக்கவும் தெரியாது—தபால் ஆபீசைக் கொளுத்தவும் தெரியாது! எல்லாம் உங்களுக்கே பழக்கம்! இப்படி மெல்ல, காந்தி வழியைக் கைவிட்டதால்தான், நீங்கள் பதவியிலிருந்து இறக்கப்பட்டிருக்கிறீர்கள். காந்தி வழியைக் கடைபிடித்ததால்தான் நாங்கள் பதவிக்கு வந்திருக்கிரேம்.

சட்டம்—ஒழுங்குப் பிரச்சினையால் கழகஆட்சியைக் கவிழ்க்க முடியாது.

தமிழகத்தில் மத்திய அமைச்சர் காயமடைந்ததைப் பற்றிக் கூறும் காங்கிரசுக்காரர்கள், தலைநகரான டில்லியில் சாதுக்கள் நடத்திய போராட்டத்தின்போது, காங்கிரசுத் தலைவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டதே—அங்கு காங்கிரசு தானே ஆண்டது? அப்போது காமராசரைக் காப்பாற்றியது தி. மு. கழகம்தானே!"

ஓர் அமைச்சர் வீம்புக்காக இப்படிச் சுற்றியிருக்க வேண்டாம்! டெல்லி அமைச்சர் இராமசாமி, நிலைமையைப் பார்த்து வராமல் போயிருந்திருக்க வேண்டும்.

'நான்கு இரயில் பெட்டிகள் எரிகின்றனவே அண்ணு' என்று நாங்கள் கேட்டபோது, 'நாலு பெட்டி போனுல் போகட்டும்—நாளை நாற்பது பெட்டிகள் செய்து கொள்ளலாம்; ஆனுல், நான்கு மாணவமணிகளைச் சாக விடலாமா?' என்று அண்ணு திருப்பிக் கேட்டார்.

கோவைச் சம்பவத்திற்கு விசாரணை கேட்கிருர்கள் காங்கிரசார்! 1965-ல் எங்கள் வீடுகளுக்குப் பாதுகாப்புக் கேட்டபோது, 'மக்கள் பார்த்துக் கொள்வார்கள்' என்று பக்தவத்சலம் சொன்னுர். ஆனுல், இன்ருே அண்ணு அவர்கள், தொலைபேசி அருகிலேயே அமர்ந்து கோவை நிகழ்ச்சிகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார்."

சின்ன விஷயம்

நிகழ்ச்சி நிரலில் இருந்தது — விவாதம் மட்டும் நடக்கவில்லை!

சர்வாதிகாரிகளின் நாக்கின் அடியில் மனிதர்கள் நசுக்கிக் கொல்லப்பட்டதாகச் சரித்திரம் உண்டு!

பிரச்சினைகளைத் தள்ளிப்போட்டு மவுனம் சாதித்தே இந்திய மக்களை அடக்கிவிட முடியும் என்று காங்கிரசுக்காரர்கள் இன்னமும் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிருர்கள்!

தீயாய் மூண்டு நாட்டையே கவ்விக்கொண்டிருக்கும் மொழிச் சிக்கலுக்கு விடிவு காணும் முயற்சி குடியரசுத் தலைவரின் உரையில்தான் இல்லையென்ருலும், காங்கிரசுப் பாராளுமன்றக் கட்சி உறுப்பினர்களாவது அதை விவாதித்தார்களா என்ருல், இல்லை!

எதை எதையோ விவாதிக்க அவர்களுக்கு நேரம் இருந்திருக்கிறது. பதினெட்டு மாநிலங்களுள் ஏதோ ஒன்றின் அமைச்சர் தேசியக் கீதத்தைப் பாடவில்லையோ என்ற ஐயப்பாட்டையெல்லாம் கிளப்பிட நேரம் இருந்திருக்கிறது.

எதிர்க் கட்சி அரசுகளைக் கவிழ்க்கும் திருவிளையாடல் முயற்சிகள் பற்றி விவாதிக்க நேரம் இருந்திருக்கிறது!

அசாம், மேற்கு வங்கம் பற்றியெல்லாம் சுடச் சுடப் பேசினுர்களாம்!

ஆனுல், மொழிப் பிரச்சினையை மட்டும் ஆறப் போட்டுவிட்டார்களாம்! காரணம், நேரமில்லையாம்!

காங்கிரசுப் பாராளுமன்ற உறுப்பினர்கள், மொழிப் பிரச்சினையில் தங்கள் கருத்துக்களைத் தெளிவாக முன்வைக்கக் காங்கிரசுத் தலைமை இடம் தரவில்லை என்பதுதான் உண்மை!

வெளிச்சம் தருகிற கதவை அடைத்துவிட்டால் வைத்தியர் வருவதற்காகக் கதவு திறந்துவைப்பதாக அர்த்தம்—என்று சீனத்துப் பழமொழி ஒன்று சொல்லுவார்கள். அதுபோல், மனம் விட்டு விவாதம் செய்யவேண்டிய பிரச்சினையை—விவாதிக்க வேண்டிய நேரத்தில், 'நேரமில்லை' என்று ஒதுக்கி வைப்பதாலேதான் தகராறுகளே வளருகின்றன!

'ஓடிக் களைப்பதைவிட, கொட்டடியில் அடைந்து கிடப்பதாலே குதிரை அதிகக் களைப்படைகிறது' என்று விலங்கு நூல் அறிஞர்கள் கூறுகிருர்கள். அதைப் போலத்தான் இருக்கிறது—காங்கிரசுப் பாராளுமன்றக் கட்சியை இயக்கி வைப்பவர்கள் நிலையும்!

மனம் இருந்தால்தானே மார்க்கம் பிறக்கும்? அவர்கள், தங்களுக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லி — கேட்டதையெல்லாம் நம்பி — தேவையில்லாததையெல்லாம் 'முடிகிறது' என்பதாலே செய்து கொண்டிருக்கிருர்களே தவிர, ஆக்கபூர்வமாய் ஒன்றும் செய்வதாகக் காணேம்!

'மானமுள்ளவர்களுக்கு, தம் சொல்லே உறுதிப் பத்திரமாகும்' என்பார்கள்; தமிழர் அதைத்தான் நம்பினர்.

மொழிப் பிரச்சினையில் கொடுக்கப்பட்ட அந்த உறுதிமொழியை சட்ட வடிவமாக்கிவிட்டால், பிரச்சினையே இல்லை! 'வீட்டிற்கு விறகு இல்லையே' என்று அலையவும் வேண்டாம்! அதற்காகக் காடு முழுவதையும் வெட்டித் தொலைக்கவும் வேண்டாம்!

நாட்டுக் கொடிக்கும், நாட்டு வாழ்த்துக்கும் மதிப்பளிக்காவிட்டால், சட்டப்படி நடவடிக்கை எடுப்பது பற்றித் தலைமையமைச்சர் அந்தக் கூட்டத்தில் உறுதியளித்திருக்கிருராம்.

"தாங்கள் புறக்கணிக்கப்படுகிரேம் — பொருளாதாரத்தில் தாங்கள் அலட்சியப்படுத்தப்படுகிரேம்—என்று அசாமியர் போன்ருேர் எண்ணுகிற எண்ணம்தான் நாட்டு வலிவைக் குறைக்கும் படைக்கலன்கள் ஆகின்றன"

என்று அதே கூட்டத்தில் உள்துறையமைச்சர் சவாண் கூறியிருக்கிருர்.

'வட்டார உணர்வுகளுக்கு வித்திட்டு உரமூட்டுபவை மத்திய அரசின் மாற்ருந்தாய் மனப்போக்குத்தான்' என்று தெளிவாகத் தெரிகிற போது, அதைக் குறைக்க மத்திய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

எதற்கெடுத்தாலும், 'சட்டம் போட்டு மக்களை வழிக்குக் கோண்டுவர முடியும்' என்று நினைப்பது சர்வாதிகாரம்! அந்த வகையில் மன மாற்றம் ஏற்பட வழி காண்பதுதான் காந்தீய முறை! காந்தியாரோடு நெருங்கிப் பழகியவர்களுக்கு காந்திவழி பற்றிச் சோல்லித் தரவேண்டியதில்லை!

மக்களின் மனப்போக்கைப் புரிந்துகொண்டு அவற்றுக்கு ஈடுகொடுக்கமாட்டாமல் சட்டங்களைச் செய்து சரிக்கட்ட முயல்கிற ஆட்சி, நெடுநாள் நில்லாது!

நிகழ்ச்சி நிரலிலே இருக்கின்ற **'மொழிப் பிரச்சினை'**யைக்கூட விவாதிககாமல் விட்டுவிட்டுப் பின்னுலே, பிரச்சினை சூடுபிடிக்கிறபோது நாடகமாடுவது பசுவைக் கொன்று செருப்புத் தானம் செய்வதற்கு ஒப்பாகும்!

காங்கிரசுக்காரர்களுக்கு இது நினைவில் இருந்தால் போதும்!

முக்கியமான பிரச்சினையை நிகழ்ச்சி நிரலில் சேர்த்தவர்கள், அதை விவாதிப்பதற்காகக் கூட்டத்தின் நேரத்தை நீடித்திருக்கலாம்; அல்லது மறுநாளாவது விவாதிக்கலாம.

மொழிப் பிரச்சினைதான் இப்படியெல்லாம் விபத்துக்கு உள்ளாகிறது! காங்கிரசுக்காரர்களின் தெளிவற்ற போக்குக்கு இது ஓர் எடுத்துக்காட்டு!

—பூரணன்

ஒரே பதவிக்கு ஊதியத்தில் வேறுபாடா?

உயர்நீதிமன்றம் கண்டனம்

சென்னை, பிப் 14—

"இரயில்வே நிர்வாகம், பட்டம் பெற்ற டாக்டர்களின் சம்பள அடிப்படையினை ஒருவிதமாகவும், 'டிப்ளமோ' பெற்ற டாக்டர்களின் சம்பள அடிப்படையை வேறுவிதமாகவும் நிர்ணயித்திருப்பது அரசியல் சட்டத்துக்கு முரணுனது; அது செல்லத்தக்கதல்ல"

என்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

இரயில்வே நிர்வாகம் நிர்ணயித்த சம்பள விகிதத்தை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட 'ரிட்' மனுவுக்கு ஆதரவாக உயர் நீதி மன்றம் இவ்வாறு தீர்ப்பளித்தது.

இரயில்வேத் துறையின் மருத்துவப் பிரிவில் உதவி 'சர்ஜன்'களாகப் பணியாற்றுவதற்கு டாக்டர் பட்டம் பெற்றவர்களையும், 'டிப்ளமோ' பெற்ற மருத்துவர்களையும் இரயில்வே நிர்வாகம் தேர்ந்தெடுத்தது.

இவ்விரு வகை மருத்துவர்களுக்கும் அளிக்கப்பட்ட பதவி ஒன்றுதான் என்ருலும், அவர்களுக்கு வழங்கப்பட்ட ஊதிய விகிதத்தில் வேறுபாடு இருந்தது.

பட்டம் பெற்ற டாக்டர்களின் ஊதியம் ரூ. 335-ல் தொடங்கி ரூ. 900 வரையில் உயரக்கூடியதாக இருந்தது; ஆனுல், 'டிப்ளமோ' பெற்ற டாக்டர்களின் ஊதியம் ரூ. 600 வரை மட்டுமே உயரத்தக்கதாக விதிக்கப்பட்டது.

இந்த முரண்பாடு குறித்து, இரு வகை டாக்டர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டபோது இரயில்வே நிர்வாகம் எதுவுமே குறிப்பிடவில்லை.

இந்த நிலையில், 'நிர்வாகம் நிர்ணயித்த ஊதிய விகிதம் செல்லத்தக்கதல்ல' என்று அறிவிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் 'ரிட்' மனு தாக்சல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரணைசெய்து தீர்ப்பு வழங்குகையில், 'இரயில்வே நிர்வாகம் நிர்ணயித்த ஊதிய விகிதம் அரசியல் சட்டத்துக்கு முரணுனது' என்றும், எனவே, 'அது செல்லத்தக்கதல்ல' என்றும் உயர் நீதிமன்றம் அறிவித்தது.

நாடாளுமன்ற மேலவைக்கு காமராசர்-சுப்பிரமணியம் போட்டி!

காமராசருக்கு ஆதரவாக நிஜலிங்கப்பா

புதுடில்லி, பிப். 14—

வருகிற மார்ச் 28-ம் நாள் நாடாளுமன்ற மேலவைக்கு நடைபெறவிருக்கின்ற தேர்தலில், காமராசரை நிறுத்துவதில் காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா தீவிரமாக முனைந்துள்ளாராம்.

இந்த அவைக்கு சில இடங்களுக்கு உறுப்பினர்களை, தமிழகச் சட்டமன்றம் தேர்ந்தெடுக்க வேண்டும்; இவற்றில் ஓர் இடம் காங்கிரசுக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது; இந்த இடத்திற்குக் காமராசரை நிறுத்த வேண்டுமென்று நிஜலிங்கப்பா விரும்புகிருராம்.

மார்ச் மாதம் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் பதவியிலிருந்து விலகுகிறவர்களில் உள்துறைத் துணை அமைச்சர் திரு. இராமசாமியும் ஒருவர்; ஆனுல் மீண்டும் தேர்தலுக்கு இவர் நிறுத்தப்படுவது இயலக்கூடியதல்ல என்று சொல்லப்படுகிறது.

இதேபோல், தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியத்தையும் நாடாளுமன்ற மேலவைக்கு நிறுத்த வேண்டுமென்று சில முக்கிய காங்கிரசுப் புள்ளிகள் விரும்புகிருர்களாம்! ஆனுல், அவருக்கு அவ்வளவு தூரம் வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

தேர்தலில் காமராசர் நிறுத்தப்பட்டால், அவர் வெற்றி பெறுவது உறுதி எனக் காங்கிரசுத் தலைவர்கள் நம்புகிருர்கள்; ஏனெனில், வலதுசாரி கம்யூனிஸ்டு எம்.எல்.ஏ.-க்கள் அவருக்குச் சாதகமாக வாக்களிப்பார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இந்திராவின் அமைச்சரவைக்குத் தமிழ்நாட்டுக்குப் போதிய பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விடக்கூடும் என்பதற்காக திரு. இராமசாமியை மீண்டும் நிறுத்த வேண்டுமென்று தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

அண்ணு ஆட்சி-- வெளி மாநிலங்களெல்லாம் புகழ்கின்றன!

அவர் இடும் கட்டளையை மகிழ்ச்சியுடன் செய்து முடிப்போம்

திரைப்பட அதிபர் நாகி ரெட்டி பேச்சு

சென்னை, பிப். 12—

"அறிஞர் அண்ணு இடும் கட்டளை எதுவானுலும் மனமகிழ்ச்சியுடன் ஏற்று நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிருேம்"

என்று வாகினி ஸ்டுடியோ அதிபர் திரு. நாகி ரெட்டி, அண்ணு முன்னிலையில் தெரிவித்தார்.

உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலத்தைச் சிறந்த முறையில் அமைத்துத் தந்த எஸ். எஸ். வாசன், மற்றும் திரைப்படத் துறைப் பெருமக்களுக்கு இராஜாஜி மண்டபத்தில் முதலமைச்சர் அண்ணு அவர்கள் அளித்த பாராட்டு விருந்தில் நன்றி தெரிவித்துப் பேசுகையிலேயே திரு. நாகி ரெட்டி இவ்வாறு கூறினுர்.

அவர் மேலும் பேசியதாவது:—

"பொதுமக்களுக்கும் நாட்டிற்கும் திரைப்படத் துறையினர் பணியாற்றியது இது முதல் முறை அல்ல; பலமுறை எங்களாலியன்ற சேவை புரிந்துள்ளோம்; அப்போதெல்லாம் இத்தகைய பாராட்டு கிடைத்ததில்லை.

உலகத் தமிழ் மாநாட்டிற்கு ஊர்வலக் காட்சிகளை அமைக்க எங்களை அழைத்தது, எங்களுக்கு அளித்த பெரும் மரியாதையாகும்.

இந்த ஊர்வலம் சிறப்பாக அமைந்ததற்கு நாங்கள் காரணம் அல்ல; நாம் எடுத்துக்கொண்ட இலட்சியம் அவ்வளவு சிறப்பானது; நமது இயக்கத்துக்கு மிகவும் ஏற்றது; இனிமையானது; நமது கலாசார பாரம்பரியத்தின் பெருமையை எடுத்துக்காட்டுவது; புனிதமானது; எனவே, நாங்களும் இதில் பங்குகொண்ட அனைவரும் பெருமகிழ்ச்சியுடன் செயல்பட்டோம்! வாசன் தளபதிபோல விளங்கினுர்—நாங்கள் சிப்பந்திகளைப்போல் பணியாற்றினேம்!

அண்ணு அவர்களே! நீங்கள் எங்களிடம் ஒப்படைத்த பணி சுயநலமற்ற பணி! நாட்டுக்கான பணி: இத்தகைய பல வாய்ப்புகளை நாங்கள் எதிர்பார்க்கிருேம்!

பதவி என்பது விரும்பாதவர்களுக்கு வருகிறது — நீங்கள் (அறிஞர் அண்ணு அவர்கள்) இதை விரும்பவில்லை!

நீங்கள் இங்கே இருக்கும்வரை, இட்ட பணி எதனையும் நாங்கள் மனமகிழ்ச்சியுடன் செய்வோம்!

உங்களது ஆட்சியைப் பிற மாநிலத்திற்கு நாங்கள் செல்லும்போது அங்குள்ளவர்கள் எல்லாம் புகழும்போது, நாங்கள் பெருமையடைகிருேம்!

இந்த நிலையில் நாங்கள் உங்களைப் பாராட்ட வேண்டும் என்று நினைத்திருந்தாலும், அதற்குள் நீங்களே முந்திக்கொண்டுவிட்டீர்கள்!

திரைத் துறையின்மீது அக்கறை கொண்ட கருணுநிதி அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிருேம்."

இரங்கற் கூட்டம்

சிவகாசி நகர தி. மு. கழகத்தின் நீண்டநாள் தொண்டரும் முகவை மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதியுமான வே. கருணுகரனின் தந்தையார் மறைவுக்கு இடுகாட்டில் சாத்தூர் வட்டச் செயலாளர் எஸ். பி. மணியம் தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது; நகரக் கழகச் சார்பிலும், சார்பு மன்றங்கள் சார்பிலும் தோழர்கள் பலர் அனுதாபம் தெரிவித்துப் பேசினர்.

மற்ருேர் 'சேனை'க் கட்சி

நாகபுரி, பிப். 14—

மகாராட்டிரத்தில் உள்ள சிவசேனையைப்போல் மற்ருேர் அமைப்பு ஏற்படவிருக்கிறது.

அரசு வேலை மற்றும் பிற வாய்ப்புக்களில் போதுமான இடங்கள் கிடைக்கப்பெருத பின் தங்கிய வகுப்பினருக்குப் போராடுவதற்காக இப்புதிய நிறுவனம் உருவாகிறதாம்.

முதலில் இந்த நிறுவனம், தனது கோரிக்கைகளை அடைய அரசியல் சட்டரீதியில் பாடுபடுமாம்; அப்படியும் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லையென்ருல், வேறு வழிகளைக் கடைபிடிக்குமாம்.

'சேனை'யின் அடிப்படையில் அமைக்கப்படும் இப்புதிய நிறுவனத்திற்குப் பல அரசியல் கட்சிகளின் தலைவர்களும் சமூக ஊழியர்களும் ஆதரவு தெரிவிக்கிருர்களாம்.

கண்ணையும் கருத்தையும் கவர்ந்த உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலம்

சிறப்பாக அமைத்த எஸ். எஸ். வாசன் குழுவினருக்குப் பாராட்டு

முதலமைச்சர் அண்ணு நடத்திய தேநீர் விருந்து நிகழ்ச்சி விவரம்

சென்னை, பிப். 12—

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி நடைபெற்ற ஊர்வலத்துக்கான இலக்கிய காட்சிகள் நிறைந்த எழிலூர்திகளையும், இன்ன பிற எழுச்சிமிகு ஏற்பாடுகளையும் செய்த ஊர்வல ஏற்பாட்டுக் குழுத் தலைவர் திரு. எஸ். எஸ். வாசன் அவர்களுக்கும்—அவர் தலைமையில் இயங்கிய கலைத் துறைப் பெருமக்களுக்கும் பாராட்டுத் தெரிவிக்கும் வகையில், முதலமைச்சர் அண்ணு அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாராட்டுத் தேநீர் விருந்து இன்று மாலை மவுண்ட்ரோடு இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் பொதுப் பணித் துறையமைச்சர் திரு. மு. கருணுநிதி வரவேற்றுப் பேசினுர்.

கல்வித் துறை அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், விழாவுக்குத் தலைமைவகித்து உரையாற்றினுர்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து, திரு. எஸ். எஸ். வாசன் அவர்களும், மற்றும் கலைத் துறையைச் சேர்ந்த திருவாளர்கள் பி. நாகி ரெட்டி, ஏ. வி. மெய்யப்பன், ஏ. எல். சீனிவாசன், சுந்தர்லால் நகாதா ஆகியோரும் பேசினர்.

தென்னிந்தியத் திரைப் படக் கலைக்கூட நிறுவனக் கழகத்திற்கு தமிழக அரசுத் தலைமைச் செயலகம் (கோட்டை) போன்று வெள்ளியால் செய்யப்பட்ட கேடயத்தை அண்ணு அவர்கள், திரு. எஸ். எஸ் வாசன் அவர்களிடம் அளித்தார்.

மற்றும் ஊர்வலக் காட்சிகள் சிறப்புடன் அமைய உதவிய கலைஞர்களான கங்கா, சானகிராமன், எஸ். டி. சுந்தரம், கொத்தமங்கலம் சுப்பு, எம். எஸ். விசுவநாதன், வின்செண்ட், தம்பு, கே. எஸ். பிரசாத், டி. என். சுந்தரம் ஆகியோருக்குப் பொன்னுடை போர்த்திப் பாராட்டினுர்.

அண்ணுவின் கருத்தை டில்லி அமைச்சரும் எதிரொலிக்கிருர்

இலட்சுமணபுரி, பிப். 13—

"இந்தியாவில் 100-கோடி மக்கள் தாரளமாக வாழமுடியும்; நமது நாடு அத்தனைப்பேருக்கும் வயிருர உணவு வழங்கும் ஆற்றல் பெற்றது; ஆனுல் அந்த ஆற்றலைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமானுல், வேளாண்மைத் துறையில் நவீன விஞ்ஞான முறைகளைக் கையாளவேண்டும்; புதிய முறை நீர்ப்பாசன வசதிகளை விளை நிலங்கள் பெறுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்"

என்று மத்திய உணவுத் துறைத் துணையமைச்சர் திரு. டி. ஆர். சவான், செய்தியாளரிடம் கருத்தறிவித்தார்.

"உத்தரப் பிரதேசத்திலும், பீகாரிலும் நவீன முறைகளைக் கையாண்டு உணவு உற்பத்தியைப் பெருக்க முடியுமானுல், அவ்விரண்டு மாநிலங்களால் மட்டுமே இந்தியா முழுமைக்கும் உணவு அளிக்க முடியும்" என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

"மகாராட்டிரத்தில் கோல்காபூர் மாவட்டத்தில் புதிய முறையில் நீர்ப்பாசன வசதி மேற்கொள்ளப் பட்டது; அதன் பயனுகக் கரும்பு அமோகமாக உற்பத்தியாகி, வருமானம் நான்கு மடங்கு அதிகரித்தது" என்று அவர் தெரிவித்தார்.

நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருப்பதற்கான காரணங்களை விளக்குகையில் அவர் கருத்தறிவித்ததாவது:—

"உற்பத்தியில் வீழ்ச்சியும், சீனு, பாகிஸ்தான் ஆகியவற்றுடன் நிகழ்ந்த மோதலும், உற்பத்தி கிட்டாத அம்சங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டதும்தான் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெரும் அளவில் நிலவச் செய்துவிட்டன."

செய்திக்கு மறுப்பு

திண்டிவனம் வட்ட தி. மு. க. செயலாளர் ஆ. தங்கவேலு அறிவிப்பதாவது:—

"தி. மு. க. பஞ்சாயத்துத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்; பணம் கையாடல் காரணமாம்" என்ற 'நவசக்தி' 2-2-68-ம் நாள் இதழின் 2-ம் பக்கத்தில் வெளியிட்டுள்ள செய்தியை கழகத் தோழர்கள் என் கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள்; உடன் அச்செய்தி பற்றி விசாரித்து அறிந்தவை:—

கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, திண்டிவனம் வட்டம் ஊரல் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் பி. வி. இலட்சுமணன் என்பவர், தாம் கழகத்தின் உறுப்பினராக சேருவதற்கு விரும்புவதாகத் தெரிவித்து, அதற்கேற்ப 26—9—67 அன்று உரிய விண்ணப்பத் தாள் மூலம் தலைமைக் கழகத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டார்.

அவர் விரும்பியதற்கேற்பவும், திண்டிவனம் நகரச் செயலாளர் செய்த சிபாரிசுக்கு ஏற்பவும், ஊரல் என்ற ஊர்க் கிளை உறுப்பினராக அவர் தலைமைக் கழகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளார்; ஆனுல் அவர், இன்னும் 'கழகத்தின் அதிகாரபூர்வமான உறுப்பினர்' என்ற உரிமை பெறவில்லை. அவரை உறுப்பினராகச் சேர்த்து அனுப்பியிருக்கும் ஊரல் கிளையும் இன்னும் தலைமைக் கழகத்தின் அதிகாரபூர்வமான கிளையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்பு அல்ல.

புதிதாக உறுப்பினராகப் பதிவு செய்யப்பட்டு, கார்டுகள் கிடைக்கப் பெற்றுள்ள தோழர்கள், அதற்கெனப் பொதுச்செயலாளர் விடுக்கும் உரிய அறிக்கைக்குப் பிறகே தம்மை உறுப்பினர் என்று உரிமை பாராட்டிக் கொள்ளவோ, பிறர் அவரை கழக உறுப்பினர் என்று கருதுவதற்கோ முடியும்.

இந்த முறையை அறிந்தவர்கள், தோழர் இலட்சுமணன் கழக உறுப்பினர் என்று மாற்றுக் கட்சி இதழ்கள் பிரச்சாரம் செய்வதையோ, அவர் பேரில் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் தன்மை கழகத்தை களங்கப்படுத்திவிடும் என்ருே நம்பி ஏமாறமாட்டார்கள்.

ஜி. டி. நாயுடு 75-வது ஆண்டு விழா

திருச்சியில் நடைபெற ஏற்பாடு

திருச்சி, பிப். 12—

"கோவை அறிவியல்—தொழிலியல் அறிஞர் திரு.ஜி.டி. நாயுடு அவர்களின் 75-வது பிறந்த நாள் விழாவை திருச்சியில் மிகச் சிறப்பாகக் கொண்டாட திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் ஏற்பாடு செய்துவருகிருர்.

"மார்ச் 17-ம்நாள் திருச்சி தேவர் மன்றத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவுக்கு தமிழவேல் சர். பி. டி. இராசன் தலைமை வகிப்பார்; பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் விழாவைத் தொடங்கி வைப்பார்; மதுரை கருமுத்து. தியாகராசனுர் பொன்னுடை போர்த்துவார்.

"வாழ்த்துரை வழங்க, இன்றைய முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்களும், முன்னுள் முதலமைச்சர்களான இராஜாஜி, திரு. ஓமந்தூர் இராமசாமி, திரு. காமராசர், திரு. பக்தவத்சலம் ஆகியோரும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிருர்கள்"

என்று, விழாக் குழுச் செயலாளர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அறிவிக்கிருர்.

மம்சாபுரத்தில் தீ விபத்து

பாதிக்கப்பட்டோருக்குக் கழக உதவி

திருவில்லிபுத்தூர் வட்டம் மம்சாபுரம் சிவந்திபட்டி நாடார் உயர் நிலைப் பள்ளியிலும் அதனைச் சுற்றியுள்ள குடியிருப்பு வீடுகளிலும் 5—2—68 மாலை 6-மணியளவில் பயங்கரத் தீ விபத்து ஏற்பட்டது.

விபத்தை அறிந்த 1-வது வட்டம், 12-வது வட்ட நகர் பேருராட்சி மன்ற உறுப்பினர்களும், நகர் தி. மு. க. துணைச்செயலாளர் மா. ஆண்டியப்பனும், மற்றும் கழகத் தோழர்களும் — பொதுமக்களும், தீயுடன் போராடித் தீயை அணைத்தனர்.

தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நகர் தி. மு. க. முயற்சியால் நிதி வசூல் செய்து பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு ஒவ்வொன்றிற்கும் 6-படி அரிசி வழங்கப்பட்டது; மேலும் நிதி கொடுக்க நகர் தி. மு. கழகம் முயற்சி எடுத்துவருகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் திருவில்லிபுத்தூர் சட்டமன்ற தி. மு. க. உறுப்பினருக்கும் தந்தி மூலமாக நிவாரண வேலைகளைக் கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

கலைக் குழு முகவரி

இராசப்பா இசைக் குழுவினரால் டேப் இராமச்சந்திரன்—குமாரி சாந்தா ஆகியோரின், 'கேளுங்கள் சொல்லுகிருேம்' எனும் தி.மு.க. சாதனை கலா நிகழ்ச்சி நடத்த விழைவோர் தொடர்புகொள்க:—

இராசப்பா இசைக் குழு,

15, இரண்டாவது சந்து,

ஆஞ்சநேயநகர்—இராயபுரம்,

சென்னை-13.

அமைச்சர் சத்தியவாணிமுத்து வீட்டுத் திருமணம்

சென்னை, பிப். 12—

செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களின் மகன்—மகள் ஆகிய இருவரின் திருமணமும் இன்று மயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தில் அறிஞர் அண்ணு தலைமையிலும்—பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

மணமகன் மு. அறச்செல்வன்—மணமகள் ப. காந்திமதி; மணமகன் மு. நா. இராவணதாஸ்—மணமகள் மு. சித்திரமுகி ஆகியோருக்கு அறிஞர் அண்ணு அவர்கள் மாலை எடுத்துக் கொடுக்க—மணமக்கள் மாலை மாற்றிக் கொள்ள—திருமண நிகழ்ச்சி நிறைவேறியது.

மணமக்களுக்கு அறிஞர் அண்ணு அவர்களும், பெரியார் ஈ. வெ. ரா., காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் எம்.பி., ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., திருமதி அலமேலு—அப்பாதுரை, மதுரை எஸ். முத்து எம்.எல்.சி., இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., டி. கே. சண்முகம் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர்.

மற்றும் கவர்னர் அவர்களும், அமைச்சர்களும், சட்டமன்ற அவைத் தலைவரும், நாடாளுமன்ற—சட்ட மன்ற—மாநகராட்சி மன்ற உறுப்பினர்களும், செட்டிநாட்டரசர் எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்களும், ஏராளமான கழகத் தோழர்களும் வந்திருந்து சிறப்பித்தனர்.

மாலையில் வரவேற்பையொட்டி செல்வி: ஜெயலலிதா குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இராசசேகரன் -- சரசுவதி திருமணம்

சென்னை, பிப். 11—

மறைந்த பழம்பெரும் சுயமரியாதை — திராவிடர் இயக்கத் தோழர் திருவாரூர் டி. என். இராமன் அவர்களின் மகனும் செய்தித் துறையமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களின் தனி உதவியாளருமான தோழர் டி. ஆர். இராசசேகரன் பி.எஸ்சி. அவர்கட்கும்—தோழியர் ஆர். சரசுவதி பி.எஸ்சி. அவர்கட்கும் இன்று காலை சாந்தோம் திருமண மண்டபத்தில் நடைபெற்ற திருமணமும், மாலையில் வரவேற்பும் சிறப்பான முறையில் நடைபெற்றன.

மாலை வரவேற்பு விருந்துக்கு மாண்புமிகு உணவமைச்சர் கே.ஏ. மதியழகன் தலைமைவகித்தார்.

மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் மா. முத்துசாமி, தோழர்கள் டி. எம். பார்த்தசாரதி, சலகண்டபுரம் ப. கண்ணன், அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

காலையில் செய்தித்துறையமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து உட்பட பல பிரமுகர்களும் வந்து திருமணத்தில் கலந்துகொண்டு வாழ்த்தினர்.

புலவர் கா. கோவிந்தன் மகன் திருமணம்

திருவத்திபுரம், பிப். 11—

தமிழகச் சட்டப் பேரவைத் துணைத்தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்களின் மகன் செல்வன்: திருமாவளவனுக்கும் — செல்வி: இராசேசுவரிக்கும், அறிஞர் அண்ணு அவர்கள் தலைமையில் இன்று திருவத்திபுரத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணுநிதி, ஏ. கோவிந்தசாமி, சட்டப்பேரவை தலைவர் ஆதித்தனுர், மற்றும் கழக முன்னணித் தோழர்களும், உள்ளூர் வெளியூர்ப் பிரமுகர்களும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

காங்கிரசு உறுப்பினரின் 'கிண்டல்' கேள்வி!

அமைச்சர் கருணாநிதி அளித்த பதில்

சென்னை, பிப். 14—

இன்று சட்டமன்றத்தில், தமிழக அரசுப் பேருந்து தொடர்பான கேள்விகள் எழுந்தபோது, காங்கிரசு உறுப்பினரான திரு. மார்ட்டின், 'பேருந்துகள், சாலையிலிருந்து நடைபாதையின்மீதும் ஏறி விபத்துக்கள் ஏற்படுவதால், ஸ்கூட்டரில் செல்வோர் பாதுகாப்புத் தொப்பி அணிந்துகொள்ள வேண்டும் என்று சொல்வது போல், அரசுப் பேருந்தில் செல்வோரும் பாதுகாப்புத் தொப்பி அணியுமாறு செய்யப்படுமா?' என்று கேட்டார்.

இதற்குப் பொதுப் பணித் துறையமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், 'இது கிண்டலாகக் கேட்கப்பட்ட கேள்வியென்றாலும் பதில் சொல்கிறேன்' என்று கூறி, பின்வருமாறு விளக்கமளித்தார்:—

"ஸ்கூட்டரில் செல்வோர் அடிக்கடி விபத்துக்குள்ளாவதைத் தடுக்க ஒரு பிரபல நரம்பு மருத்துவ நிபுணர், பழைய அரசுக்கு ஒரு யோசனை தெரிவித்திருந்தார்; 'ஸ்கூட்டரில் செல்வோர், தலைக்குப் பாதுகாப்புத் தொப்பி அணிந்தால் விபத்தில் பலத்த காயமடையாமல் தப்பலாம்' என்ற அவர் யோசனையை, முன்பிருந்த முதலமைச்சரான-மரியாதைக்குரிய பக்தவத்சலம் அவர்கள், 'நல்ல யோசனை' என்று குறிப்பெழுதி வைத்திருந்தார். நாங்கள் பொறுப்பேற்றதும், அவர் எழுதிய குறிப்பை ஏற்று ஆலோசித்து, சில முயற்சிகளை எடுத்துக்கொண்டோம்.

"இதை வைத்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினரும் அவசரப்பட்டு, 'பஸ்ஸில் செல்வோரும் தொப்பியணியச் செய்யப்படுமா?' என்று கேட்டிருக்கிறார்.

"பஸ்களில் செல்வோரும் தொப்பி அணியவேண்டுமென்றால் இரயிலில் செல்வோரும் தொப்பி அணியவேண்டியிருக்கும்; ஏனெனில், மத்திய அரசாங்கத்தின் இரயில்களும் பல விபத்துக்களுக்கு உள்ளாகின்றன—கவிழ்கின்றன!" (ஆளுந்தரப்பு வரிசையில் கைதட்டல்)

கே. விநாயகம் (காங்):—"கனம் அமைச்சர் அவர்கள், இதை, 'கிண்டல் கேள்வி' என்றார்; தகவல் தெரிந்துகொள்வதற்காகத்தான் இங்கு கேள்விகள் கேட்கப்படுகின்றனவே தவிர, கிண்டல் செய்வதற்காக அல்ல; எனவே, 'கிண்டல்' என்று அவர் கூறியது பற்றி அவைத் தலைவர் தமது தீர்ப்பை வழங்க வேண்டும்."

அமைச்சர்:—"கிண்டல் என்று நான் கூறியதற்குப் பொருள் 'பிரச்சினைகளை இந்தக் கேள்வி கிண்டுகிறது' என்பதுதான்!" (சிரிப்பு)

அவைத் தலைவர்:—"'கிண்டல்' என்ற சொல் பயன்படுத்தத்தக்க சொல்தான்; முறைகேடானதல்ல." (கைதட்டல்)

மின் கழகத் தலைவர் இராஜிநாமா செய்யவில்லை—அமைச்சர் விளக்கம்

சென்னை, பிப். 14—

தமிழக மின்கழகத் தலைவராக இருந்துவரும் திரு. அப்பாதுரை (முதலியார்), பதவியிலிருந்து விலக, விலகல் கடிதம் கொடுத்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியானது குறித்து இன்று சட்டமன்றத்தில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு, தொழில் அமைச்சர் விடையளிக்கும் வகையில் அளித்த விளக்கம் வருமாறு:—

"மின் கழகத் தலைவர் இராஜிநாமா செய்யவில்லை; அவர் பதவி முடிந்து மேலும் ஓராண்டுக்கு அதிகப்படியாக பதவியில் நியமிக்கப்பட்டிருந்தார்; அவர் தம்மை விரைவில் பதவியிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார்; அவ்வளவுதான்; இராஜிநாமா செய்துவிட்டதாகக் கூறுவது சரியல்ல."

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வளர்க்க விரும்புகிறவர்கள்! காங்கிரசுத் தோழர் வலது கன்னத்தில் அறைந்தால், தங்களுடைய இடது கன்னத்தையும் திருப்பிக் காட்டி அடிபட்டுக் கழகத்தை இன்றிருக்கும் உன்னத நிலைக்குக் கொண்டுவந்த கழகத் தோழர்கள், இனியும், 'வன்முறைத்கு வன்முறையாலேயே பதிலளிப்பார்கள்' என்று எந்தக் காங்கிரசுத் தோழரும் எதிர்பார்க்கக்கூடாது!

மாணவர்களின் உண்மையான நலன்களை தி. மு. கழக அரசு காப்பாற்ற உறுதிபூண்டிருக்கிறது! அதேபோல், மாணவர்களின் பேரில் காங்கிரசாருக்கு ஏற்படும் காழ்ப்பு உணர்வையும், பழிவாங்கும் துடிப்பையும் கழகத் தோழர்கள் தமது இரத்தத்தைச் சிந்தியே தணிக்கவேண்டும் என்று காங்கிரசார் விரும்பினால், அதற்கும் கழகத் தோழர்கள் மறுமொழி கூருது இரத்தம் சிந்தத் தயாராக இருக்கிறார்கள்!

நடக்க இருப்பவை

15--2--68

அந்தியூர்

நகர தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு தேரடித் திடலில்; தலைவர்: க.சா. வேலாயுதம்; பேசுவோர்: திருவை. ஆ. அண்ணாமலை, ஈ.எம். நடராசன் எம்.எல்.ஏ., ஏ. சுப்பிரமணியம், பவானி கணேசன், எஸ்.ஆர். பொன்னுசாமி பி.ஏ., பி.எல்., அ.க. துரைராசு, மற்றும் பலர்.

திண்டுக்கல் 15-வது வட்டாரம்

எம்.ஜி.ஆர். மன்றத் திறப்பு விழா; இரவு 7 மணிக்கு நகரசுத்தித் தொழிலாளர் குடியிருப்பில்; தலைவர்: க.வே.வி. இராசன்; மன்றத் திறப்பாளர்: வழக்கறிஞர் அ. பாலமுருகேசன்; கொடியேற்றுபவர்: மா. தங்கவேலர்; பேசுவோர்: எஸ். காமராஜ், பொன். சீனிவாசன், எஸ்.ஏ. இராசன், க. மைக்கேல், தேவதாமஸ்.

வில்லிவாக்கம்

கே.வி.கே. சாமி நினைவு மன்றச் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் க. இராசாராம் பி.ஏ. அவர்களுக்குப் பாராட்டு; மாலை 6 மணிக்கு பேருந்து நிலையம் அருகில்; தலைவர்: டி.எம். பார்த்தசாரதி; பேசுவோர்: அமைச்சர் கே.ஏ. மதியழகன், வி.எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., மாணவர் தலைவர் சனார்த்தனம், டி.கே. பொன்னுவேலு பி.ஏ., ஆ. பலராமன், மற்றும் பலர்.

திருமங்கலம்

தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு வள்ளுவர் திடலில்; தலைவர்: மு. முத்துக்குமரன்; பேசுவோர்: மு.க.து. நடராசன் எம்.எல்.ஏ., சி. பரமசிவம், இரா. கோபால் பி.காம்., ப. அறிவழகன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"தொழில் தகராறுகளையும், வேலை நிறுத்தங்களையும், வெறும் சட்டம்—ஒழுங்குப் பிரச்சினைகளாகக் கருதக்கூடாது"

என்று இறுக்கமான கோட்டுக்குள் 'பயணம்' செய்த இடதுசாரி கம்யூனிஸ்டு உறுப்பினர் சி. கோவிந்தராசனுக்கு,

"சமரச முயற்சிகளில் தோல்வியடைந்த தொழில் தகராறுகள் அனைத்தையும் அடுத்து மத்தியஸ்தர் தீர்வுக்கு விடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற கொள்கையைக் கம்யூனிஸ்டுக் கட்சி ஏற்றுக்கொள்கிறதா?"

என சட்ட அமைச்சர் கேட்டிருக்கும் வினவுக்கு, அந்த உறுப்பினர் தரப்பிலிருந்து தக்க பதில் வந்திருப்பதாகத் தெரியவில்லை!

"சமரசத்தில் தோல்வியுற்ற சில தொழில் தகராறுகள் நடுவர் தீர்ப்புக்குப் போகுமுன், வேலைநிறுத்தம் போன்ற திசையில் சென்றதால் விளைந்த குழப்பங்களை எடுத்துக்காட்டி, அதைத் தடுப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் குறைகூறும் கம்யூனிஸ்டு உறுப்பினர்களின் குற்றச்சாட்டுகளுக்கு சட்ட அமைச்சர் அளித்துள்ள விளக்கம், **பொதுமக்கள் மட்டத்தில் இல்லையென்றாலும், அரசியல் பார்வையாளர்களிடை—பல்வேறு கட்சித் தலைவர்கள் மத்தியில் நல்லதொரு சிந்தனையைத் தேடித் தரும் என்பதில் ஐயமில்லை.**

திருவொற்றியூர் துப்பாக்கிப் பிரயோகம் பற்றி இடது கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் சட்டமன்றத்திலும் பேசியிருப்பது, சம்பவம் நடைபெற்றவுடன் சட்ட அமைச்சர் தந்த அறிக்கையினைச் சரிவரப் படிக்கவில்லை என்பதனைத்தான் காட்டுகிறது.

★ **விம்கோ தொழில் தகராறில் சமரசப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்து வைத்ததோ தொழில்துறை அதிகாரிதான்!**

★ **ஆனால், பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கும்போதே வேலைநிறுத்தம் துவங்கப்பட்டுவிட்டது;**

★ **சட்ட அடிப்படையில் அந்த வேலைநிறுத்தம் தவறான ஒன்று;**

★ **இருந்தாலும், அதைக் கருத்தில் கொள்ளாமல் இருதரப்பினருடன் சம்பவத்தன்று முதல் நாள் நடு இரவு வரையில், முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்**

என்ற மூன்று நடப்புகளை அமைச்சர் மாதவன் அவர்கள் மீண்டும் நேற்று விளக்கிக் காட்டியிருப்பது, இனி கம்யூனிஸ்டு நண்பர்களின் தவறான எண்ணத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக இருக்கட்டும்!

★

கவர்னர் உரை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கழக உறுப்பினர் ஐவர் பங்குபெற்றிருக்கின்றனர்.

"மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தருவதன்மூலம் மொழிப் பிரச்சினை மட்டுமல்ல—பல பொருளாதாரப் பிரச்சினைகளும் சுமூகமாகத் தீர்க்கப்பட்டுவிடும்" என்று கூறியிருக்கும் ஏ. எம். இராசா, கவர்னர் உரையில் இடம்பெற்றுள்ள கூட்டாட்சித் தத்துவத்துக்கு மற்றொரு கோணத்தில் விளக்கம் தந்துள்ளார்.

முதல் நாளன்று பேசிய தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பியை அடுத்து, நேற்றும், காங்கிரசாரை இரண்டாவது முறையாக இக்கட்டில் ஆழ்த்தியிருக்கும் உரை ஒன்றினை ஆற்றியிருக்கிறார்—**விருதுநகர் உறுப்பினர் பெ. சீனிவாசன்;**

"இரட்டை வேடம் வேண்டாம்; காங்கிரசிலிருந்து வெளியேறி இந்தியை எதிர்ப்பதில் கழகத்துடன் போராடுங்கள்; அல்லது காங்கிரசிலேயே இருந்து இந்திக்காக வாதாடுங்கள்"

என்று அவர் தந்திருக்கும் இரண்டு வழிவகைகள் தான், இன்றையத் தமிழகக் காங்கிரசாருக்கு இருக்கின்றன.

ஆனால் அவர்களோ, இரண்டில் எதையுமே தேர்ந்தெடுக்கும் துணிவு இல்லாததால், 'அரசியல் கோழை'களாக உலவி வரவேண்டியிருக்கிறது!

"தமிழ் மத்திய ஆட்சிமொழிகளில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்படும்வரையில் தமிழ்நாடு, இந்தியை ஓர் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ளாது"

என ஏ. சி. நரசிம்மன் தந்திருக்கும் இரத்தினச் சுருக்கமான கருத்து, 'மொழிப் பிரச்சினை என்றால் என்ன' என்று தெரிந்துகொள்ள இயலாத பாமரர்களும் புரிந்துகொள்ளும்வகையில் இருக்கிறது!

"புதுக்கோட்டை, தனி மாவட்டமாக ஆக்கப்பட வேண்டும் எனக் கோரியிருக்கும் கே. வி. சுப்பையா, புஞ்சை நிலங்களுக்கு வரி விலக்குத் தந்திருப்பதுபோலவே 'மானாவாரி' (மழையை எதிர்பார்த்துப் பயிரிடப்படும்) நிலங்களுக்கும் வரி தள்ளுபடி செய்யவேண்டும்"

என வேண்டுகோள் விடுத்திருப்பது, **புதியதோர் யோசனையாகும்.**

"மத்திய-மாநில அரசுகளுக்கிடையே இருக்கும் உறவு முறைகளைப்பற்றிக் குறிப்பிடுவதே பஞ்சமாபாதகங்களில் ஒன்று என்று கருதும் காலம் மலையேறிவிட்டது என்பதை கவர்னர் உரை காட்டுகிறது"

எனக் கூறியிருக்கும் என். தருமலிங்கம் அவர்களின் திறனாய்வு, ஒரு திறமைமிக்க அரசியல் கண்ணோட்டமாகத் திகழ்கிறது!

மொழித் துறையில் இரட்டைப் போக்கினை அனுசரிக்கும் காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் ஏ. சிதம்பரநாதனிடமிருந்து, 'வெண்ணெய்—சுண்ணாம்பு' உதாரணம் வந்திருப்பது வேடிக்கையாக இருக்கிறது!

'படி அரிசித் திட்டம் பட்டணங்களுக்கு மட்டுந்தானா? பட்டிக்காடுகளுக்கு இல்லையா? ஒரு கண்ணுக்கு வெண்ணெய்—மற்றொன்றுக்கு சுண்ணாம்பா?' என்ற போக்கினில் கவலைப்பட்டிருக்கும் அவர், தமது கட்சியை இனியாவது, **'படி அரிசித் திட்டம் இப்போது அமுலில் இருக்கும் அளவு வரையில் வரவேற்கத்தக்க ஒன்றுதான்'** என்பதனை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள வைக்க முயற்சிக்கவேண்டும்.

'படி அரிசித் திட்டத்தின் மூலம் பணமெல்லாம் பாழ்' என்று ஒரு மூலையில் பேசிவிட்டு, வேறொரு மூலையில், 'கிராமங்களுக்குப் படி அரிசி எப்போது' என்று கேட்பது அவர்களுக்கு உள்ள 'அரசியல் பசி'யினைத் தான் காட்டுகிறது!

இடதுசாரி கம்யூனிஸ்டுகள், ஓர் அனைத்திந்தியக் கட்சியினைச் சேர்ந்தவர்கள் என்றாலும், தமிழகத்தில் உள்ள அந்த அமைப்பின் உறுப்பினர்கள், 'மாநிலத்தின் பிரச்சினைகளைத்தான் முதலில் வைப்பார்கள்' என்று கருதும் வகையில், நேற்றையத்தினம் சட்டமன்றத்தில் பணியாற்றியிருக்கிறார்கள்.

கோவையில் மத்திய அரசின் ரிசர்வ் போலீசைத் தங்கவைத்திருப்பது பற்றி வி. கே. கோதண்டராமன் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானமும்—

"மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைதான் மாநிலங்களில் தொழில்துறை கிளர்ச்சிகளுக்கு இடம் அளிக்கின்றன" என கோவிந்தராசன் பேசியிருப்பதும்—

இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியினரால் தொடர்ந்து இதயத்தில் வைக்கப்பட வேண்டிய கருத்தோட்டங்களாகும்!

அனைத்திந்திய அடிப்படையைக் கொண்ட தமிழகத்துக் காங்கிரசுக்காரரும், தேவை நேரிடும்போது இதுபோல் சொந்த மாநிலத்துக்கு முதலிடம் தரவேண்டும்!

"உறுப்பினர்கள் தங்கள் உரையை மன்றத்தில் எழுதிப் படிக்கலாமா?" என்ற சுதந்தரா உறுப்பினர் ஒருவரின் பேச்சு பற்றிக் கழக உறுப்பினர் கா. வேழவேந்தன் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையும், அதனையொட்டி அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன் ஆகியோர் தந்த விளக்கமும், புதுடில்லி நாடாளுமன்ற நிகழ்ச்சிகளை நினைவூட்டுகின்றன.

உறுப்பினர்கள் ஆற்றவேண்டிய உரைகளைத் தயாரித்துக் கொடுக்கும் 'வியாபார எழுத்தாளர்'கள், புதுடில்லியில் உண்டு; எந்தக் கட்சி உறுப்பினராக இருந்தாலும், அதற்குத் தக்கவாறு எழுதிக் கொடுப்பதுதான் அவர்களுடைய சாமர்த்தியம்!

சோஷலிசக் கொள்கைகளைத் தூக்கித் தயாரித்து அதுபோன்ற உரை ஒன்றினைக் காங்கிரசு உறுப்பினர் நாடாளுமன்றத்தில் படிக்க நேர்ந்தபோது, பரபரப்பு ஏற்பட்டது! வேறு கட்சி உறுப்பினர்களுக்காக எழுதப்பட்ட உரை ஒன்றினை, தவறி அவரிடம் கொடுத்துவிட்டார் தயாரிப்பாளர்! அதன் விளைவுதான் குழப்பம்!

'மனதில் தோன்றிய கருத்துக்களை சுயேச்சையாக அவையில் சொல்லவேண்டுமென்பதற்காகத்தான், உறுப்பினர்கள், பார்த்துப் படிக்கும் முறை பொதுவாக அனுமதிக்கப்படுவதில்லை"

என்று தொழில்துறை அமைச்சர் தந்துள்ள விளக்கம், புதுடில்லியில் நடந்தவை போன்ற தவறுகளுக்கு இடமளிக்கக் கூடாது என்ற அக்கறையின் அடிப்படையினால்தான்!

மேலவையில்......

"ஆதிபத்திய உணர்வுகளைக் கொண்டிருக்கும் ஏதாவது ஒரு மொழி உண்டு என்றால், அது, 'இந்தி' ஒன்றுதான்"

என்று என். வி நடராசன் தந்துள்ள அரசியல் நிலை பற்றிய விளக்கத்துடன், மேலவை, கவர்னர் உரை மீதான நன்றி தெரிவிப்பு விவாதத்தினைத் தொடர்ந்திருக்கிறது.

சட்டம் அமைதி போன்றவைகளுக்கு, 'புதிய—பெரிய' விளக்கங்களைக் கொடுப்பவர்களுக்கு, தமிழகம் நீங்கிய மற்ற மாநிலங்களில் உள்ள அன்றாட அமைதியின்மையை அவர் எடுத்துக் காட்டியிருப்பது, காலமறிந்து தந்துள்ள விளக்கமாகும்.

'விலைவாசிகள் ஏறிவிட்டன' என்று பொதுவாகக் குறைகூறிப் பேசிய உறுப்பினருக்கு—என். வி. நடராசன் அவர்கள் குறுக்கிட்டு—நல்லெண்ணெய், கடலெண்ணெய், மிளகாய் போன்ற பொருள்கள் சென்ற ஆண்டினைவிட விலை குறைந்திருப்பதனைப் புள்ளிவிவரத்துடன் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

"மும்மொழித் திட்டம் கைவிடப்பட்டிருப்பதுடன் தமிழகத்துக்கு இருந்த மொழி ஆபத்து நீக்கப்பட்டுவிட்டது; இனி படிப்பில் கவனம் செலுத்துங்கள்" என மாணவர்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்திருப்பதும், அவர்கள் தரப்பில் சில பகுதியினரிடையே உள்ள குழப்பத்துக்குத் தந்திருக்கும் முற்றுப்புள்ளியாகும்.